**<u>தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள்</u>**
**<u>பிறப்பிப்பவர் : திருமதி.ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப.,</u>**

ந.க.எண் : 19502/2018/கே3 நாள்:14.02.2022.

பொருள் : பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - தருமபுரி மாவட்டம் - கருணை அடிப்படையில் பணிநியமனம் - திரு.பீ.அசோக் குமார், த/பெ. கு.பீரன் (லேட்) - மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தருமபுரி - இளநிலை உதவியாளர் நிலையில் 26.08.2019 முற்பகல் வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

தகவல் :

1. தருமபுரி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.6394/2017/கே.3, நாள்: 26.08.2019.
2. அரசாணை நிலை எண். 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள்: 26.02.2021.
3. அரசு இணைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் இ(3) துறை , சென்னை கடித எண்.6895/இ3/2021-5, நாள்: 14.12.2021.
4. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை ந.க.எண்.18355/2021/டி.2, நாள்: 18.12.2021.

<u>ஆணை:-</u>

தருமபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் ஊர்நல அலுவலர் நிலை-II ஆகப் பணிபுரிந்து 08.11.2018 அன்று பணியிடைக் காலமான திரு.கு.பீரன் (லேட்) என்பவரின் வாரிசுதாரர் திரு.பீ.அசோக்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தகவல்(1)-இல் கண்ட செயல்முறை ஆணையின்படி, தற்காலிகமாக பணிநியமனம் வழங்கி உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து, தனியர் திரு.பீ.அசோக்குமார் என்பவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தருமபுரி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 26.08.2019 முற்பகல் அன்று பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

தகவல் (2), (3) மற்றும் (4)-இல் காணும் அரசாணை மற்றும் கடிதங்களில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணிநியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு ஆணையினை செயல்படுத்த சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்களின் ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர் நிலையிலேயே பணிவரன்முறை செய்திட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது..

இதனடிப்படையில் திரு.பீ.அசோக்குமார், இளநிலை உதவியாளர் என்பரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் 26.08.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்து இதன்வழி ஆணையிடப்படுகிறது.

ஒம்/-ச.திவ்யதர்சினி,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
தருமபுரி.

// உண்மை நகல்//

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர்(வளர்ச்சி) (பொ),
தருமபுரி.

பெறுநர்

திரு.பீ.அசோக்குமார்,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
தருமபுரி - (கூடுதல் ஆட்சியர்(வ) / திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தருமபுரி -மூலமாக)

<u>நகல்</u> :
1) செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை - 600003.
2) இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை - 15.
3) கூடுதல் ஆட்சியர்(வ) / திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தருமபுரி.
4) கே3 முக்கிய ஆணை தொகுப்பிற்கு.